# உயிரியல் நிறுவகம், இலங்கை

**(1984 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க**
**பாராளுமன்ற சட்டத்தினால் ஒன்றிணைக்கப்பட்டது)**

# இலங்கை உயிரியல் ஒலிம்பியட் - 2009

–

இலங்கை மாணவர்கள், இலங்கை உயிரியல் ஒலிம்பியட் - 2009 இல் போட்டியிட்டுப் பதக்கங்களை வென்றெடுக்கலாம். அத்துடன் நான்கு மாணவர்கள் 2010 ஆம் ஆண்டில் தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச உயிரியல் ஒலிம்பியட் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்படுவர்.

**தகுதி:**

2009 அல்லது 2010 ஆம் ஆண்டில் இலங்கை அல்லது லண்டன் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றவிருப்பவர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். இலங்கை உயிரியல் ஒலிம்பியட்டில் (Sri Lanka Biology Olympiad) போட்டியிடுபவர்களுக்கு வயதெல்லை கிடையாது. ஆனால் அடுத்து நடைபெறவிருக்கும் சர்வதேச உயிரியல் ஒலிம்பியட் (International Biology Olympiad) போட்டியில் பங்குபற்றுபவர்கள் 2010 ஜுன் 30ஆம் திகதி 20 வயதிற்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை :**

- விண்ணப்பக்கட்டணம் ரூ. 400.00. இக்கட்டணத்தை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் திம்பிரியசாய மக்கள் வங்கிக் கிளையிலுள்ள “Institute of Biology” யின் 086-1-001-4-1191763 இலக்கக் கணக்குக்குச் செலுத்தலாம்.
- விண்ணப்பதாரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து மக்கள் வங்கியினால் தரப்பட்ட பணவரவு பற்றுச்சீட்டையும் இணைத்து 2009 ஏப்பிரல் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்:

    இலங்கை உயிரியல் ஒலிம்பியட் இணைப்பாளர், இலங்கை உயிரியல் நிறுவகம், SLAAS செயலகம், 120/10, வித்யா மாவத்தை,கொழும்பு 07.
- விண்ணப்பப்படிவங்களை பின்வரும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் http://www.iobsl.org. இப்படிவத்தின் புகைப்பட பிரதிகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**இலங்கை உயிரியல் ஒலிம்ப்பியாட் போட்டி :**

- வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படவுள்ள பரீட்சை 2009 ஜுன் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்வரும் நிலையங்களில் மு. ப. 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடத்தப்படும்:

  கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு.
  கிழக்கு பல்கலைக்கழகம், மட்டக்களப்பு
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
  களனி பல்கலைக்கழகம், களனி
  பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை
  உறுகுணு பல்கலைக்கழகம், மாத்தறை
  ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், நுகேகொட

- போட்டியாளர்கள் 50 பல்தேர்வு வினாக்களையும் மற்றும் 25 சிறுவிடை வினாக்களையும் கொண்ட இரு மணித்தியால தேர்வுக்குத் தோன்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர்.
- இத் தேர்வு பிரதானமாக க. பொ. த (உயர்தர) உயிரியல் (பிரயோக உயிரியல் அலகு தவிர்ந்த) பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அத்துடன் உயிரியல் சமகால அபிவிருத்தி மற்றும் பிரயோகம் சார்ந்த வினாக்களையும் கொண்டிருக்க முடியும்.
- பரீட்சார்த்திகள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
- 2009 ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.

**வெற்றியாளர்க்களைத் தெரிவுசெய்த்தல் :**

- பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தங்கம், வெள்ளி அல்லது வெண்கல பதக்கங்கள் வழங்கப்படும். வெற்றியாளர்களை தெரிவுசெய்வதில் இலங்கை உயிரியல் நிறுவகத்தின் பேரவையினது முடிவே இறுதியானதாகும்.
- 50 வீதத்துக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கு திறமைச்சான்றிதழ்கள் வழங்கப்படும். சகல பெறுபேறுகளும் இலங்கை உயிரியல் நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.iobsl.org.) பிரசுரிக்கப்படும்.

---

மேலதிக விபரங்களுக்கு: ஸ்ரீஜெயவரத்தனபுர பல்கலைக்கழகத்திலுள்ள இலங்கை உயிரியல் ஒலிம்பியட் இணைப்பு மையத்துடன் தொலைபேசி இல. 011-2840963 இல் ரமணிக்கா, திலினா அல்லது துல்மினி யைத் தொடர்பு கொள்ளவும்.